Registered Number :
TN/MA/ 14/2018-2020
RNI No : TNTAM /2000/912
Date of publishing :
5th June 2018
Date of posting :
10, 11th June 2018
Posted at BPC, Madurai

கண் ஒளி

அரவிந்த் வெளியீடு

கண் நல விழிப்புணர்வு மாத இதழ்

ஆசிரியர்
டாக்டர்.ஜி.நாச்சியார்

ஆசிரியர் குழு
சித்ரா துளசிராஜ்
கோ. முருகராஜ்
திவ்யா ரமேஷ்

சந்தா பொறுப்பாளர்
ஜெ. பரிமளா

தொடர்புக்கு :
'கண்ஒளி'
அரவிந்த் கண்
மருத்துவமனை,
1, அண்ணாநகர்,
மதுரை – 625020

மின்னஞ்சல் :
kannoli@aravind.org

# கண் ஒளி

விழி 34 பார்வை 11 ஜூன் 2018

## அன்பின் வாசகர்களுக்கு!



கோடை விடுமுறை முடிந்து பள்ளி, கல்லூரிகள் திறந்துவிட்டன. நம்மில் பெரும்பாலானோர் வீடுகளில் கல்வி கற்கும் குழந்தைகள் இளம் வயதினராக இருப்பார்கள். கல்வியாண்டை நாம் தொடங்கும் வேளையில் அவர்களது உடல், மன நல ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்குவோம்.

அரவிந்த் கண் காப்பு மையமானது நோயாளிகளுக்கு கண் சிகிச்சைகள் வழங்குவதுடன் நின்று விடுவதில்லை. பொது மக்களுக்கும் நோயாளிகளுக்கும் கண் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை முக்கிய கடமையாகவே கொண்டு செயல்படுகிறது. கண் பாதுகாப்பின் பல்வேறு சிறப்பம்சங்களை பல வடிவங்களில் மக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து அளித்து வருகிறது. அம்முயற்சியின் ஒரு வடிவமே 'கண் ஒளி'. இதழின் கட்டுரைகளையும் மருத்துவத் தகவல்களையும் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து செழுமைப்படுத்தி வருகிறோம். அவ்வகையில் கண் சிகிச்சைப் பிரிவு ஒவ்வொன்றையும் சிறப்பிதழாகக் கொண்டுவரும் நோக்கத்தின் முதல் முயற்சியாகவே சென்ற மாதம் கோடை சிறப்பிதழை வெளியிட்டோம். இதழ் குறித்த உங்கள் கருத்துகளையும் விமர்சனங்களையும் யோசனைகளையும் எங்களுடன் பகிர்ந்துகொள்ளவும். அவற்றின் அடிப்படையில் கண் நல விழிப்புணர்வு கட்டுரைகளை மேலும் சிறப்பாக உங்களுக்கு அளிக்க ஆவலுடன் உள்ளோம்.

இந்த இதழில் செயற்கை கண், விழித்திரை புற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மருத்துவமும் தொழில்நுட்பமும் இணைந்து வளப்படுத்தியுள்ள துறையே செயற்கை கண் பிரிவு. கண் நோய்களில் தீவிரமானது விழித்திரை புற்று நோய். மேலும் இலவச கண் சிகிச்சை முகாம்கள் இந்த மாதம் எங்கெல்லாம் நடைபெற உள்ளன என்பது பற்றிய விவரங்களும் எப்போதும் போல் இடம்பெற்றுள்ளன. இந்த விவரங்களை உங்கள் அன்புக்குரியவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும்.

*- ஆசிரியர் குழு*

அமெரிக்க, ஐரோப்பிய
மற்றும் உலக சுகாதார
நிறுவனத்தின் (WHO)
தரநிலைகள்
பூர்த்தி செய்யப்படுகின்றன

# உலக தரத்திற்கு இணையான தயாரிப்புகள் வாங்கக்கூடிய விலையில்

மடங்ககூடிய மற்றும் மடங்காத
உள்விழி லென்ஸ்கள்



கண்சொட்டு மருந்துகள்





## 74% பணியாளர்கள் பெண்கள்

- கண்மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் தயாரிப்பில் 20 வருடத்திற்கும் மேலாக அனுபவமிக்க நிறுவனம்.
- 2014-ம் ஆண்டிற்கான CNN-IBN சேனலின் “நாளைய நல்வாழ்விற்கான கண்டுபிடிப்புகள்” விருது பெற்ற நிறுவனம்.

TÜVRheinland®
EN ISO 9001 : 2008
EN ISO 13485 : 2012 / AC : 2012




CE
0197
மருத்துவ கருவிகளை
ஐரோப்பிய நாடுகளில்
விற்பதற்கான **CE** முத்திரை



aurolab
**மேலும் தொடர்புக்கு**
போன்:0452-3096 100
இ-மெயில்: info@aurolab.com
web:www.aurolab.com

# ஆலோசனைப் பகுதி

எனது அப்பாவிற்கு சில நாட்களுக்கு முன் மதுரை அரவிந்த் மருத்துவமனையில் கண்புரை அறுவை சிகிச்சை செய்தோம். செவிலியர்கள் எங்களிடம் அறுவை சிகிச்சைக்குப்பின் செய்ய வேண்டியவை என்ன, செய்யக் கூடாதவை என்ன என்பதைத் தெளிவாக விளக்கினர். இருப்பினும் அவற்றை சரியாக நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை. அறுவை சிகிச்சை செய்த கண்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும், எத்தனை நாட்கள் கழித்து தலைக்கு குளிக்கலாம் என்ற விவரங்கள் தெரியவில்லை. விளக்கமாகக் கூறவும்.

*சஞ்சனா, திருப்பத்தூர்*

பொதுவாக கண்புரை அறுவை சிகிச்சை முடிந்து செல்லும் நோயாளிகளில் பலர் கேட்கும் கேள்வி இதுதான். தலைக்குக் குளிக்கும்போது தண்ணீர், ஷாம்பு, சீயக்காய் ஆகியவை கண்களில் விழ நேர்ந்தால் வலி, உறுத்தல் ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே, 15 நாட்களுக்குக் கழுத்துக்குக் கீழ் மட்டுமே குளிக்க வேண்டும். 15 நாட்களுக்குப் பிறகு தலைக்கு குளிக்கலாம். மேலும் தானாக முகச் சவரம் செய்து கொள்பவர்கள் 3 நாட்கள் கழித்து செய்யலாம். கடைகளில் முகச் சவரம் செய்து கொள்பவர்கள் 7 நாட்கள் கழித்தே செய்ய வேண்டும். எந்தெந்த மருந்துகளை எப்போது பயன்படுத்த வேண்டும் என்பதை டிஸ்சார்ஜ் சம்மரியில் (Discharge Summary) மருத்துவர்கள் குறிப்பிடுவார்கள். சந்தேகம் ஏற்படும்போது அதைப் பார்த்துப் பயன் பெறவும்.

*ஆலோசகர், அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை*

## கண்புரை அறுவை சிகிச்சைக்குப்பின்
## நோயாளிகள் பின்பற்ற வேண்டியவை



அறுவை சிகிச்சை செய்த கண்ணின் பக்கம் மூன்று நாட்களுக்கு படுக்கக்கூடாது



டிவி பார்ப்பதையும் பேப்பர் படிப்பதையும் ஒரு வாரத்திற்கு தவிர்க்கவும்.



தானாகச் முகச்சவரம் செய்பவர்கள் மூன்று நாட்கள் கழித்தும், கடைகளில் செய்பவர்கள் ஏழு நாட்கள் கழித்தும் செய்ய வேண்டும்.



வழக்கமாக எடுக்கும் மாத்திரை மருந்துகள் மற்றும் உணவு முறைகளை எப்பொழுதும் எடுத்துக் கொள்ளலாம்.



அறுவைசிகிச்சை முடிந்து வீட்டிற்கு சென்றபின், கண்ணில் வலியோ, அதிகமாக நீர் வடிந்தாலோ, பார்வை குறைபாடு இருந்தாலோ உடனடியாக நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து வரவும்.



தினமும் கழுத்துக்குக் கீழ் குளிக்கலாம்.
15 நாட்கள் கழித்து ஷாம்பு அல்லது சோப்பு போட்டு தலைகுளிக்கலாம்.



வெளியே செல்லும் போது ஒரு மாதத்திற்கு கருப்புக் கண்ணாடி அணிய வேண்டும். தூசி, புகை உள்ள இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்கவும்.



அறுவை சிகிச்சை முடிந்த நோயாளிகள், உங்கள் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள தேதியில் மறுபரிசோதனை செய்துகொள்ளவும்







## தரமான கண் கண்ணாடிகள் வாங்க எங்களை அணுகுங்கள்

## ARAVIND OPTICALS

அரவிந்த் ஆப்டிகல்ஸ்

அரவிந்த் கண்மருத்துவமனை

1, அண்ணாநகர், மதுரை - 625 020

தொலைபேசி - 0452-4356164

புரொக்ரஸிவ் லென்ஸ்கள்

பிளாஸ்டிக் லென்ஸ்கள்– லேசான, உடையாத லென்ஸ்கள்

பிரதிபலிப்பு இல்லாத கண்ணாடிகள்

கீறல் விழாத கண்ணாடிகள் மற்றும் ஏராளமான அழகிய பிரேம்கள்

# கண் பரிசோதனை மையங்கள்: கோயம்புத்தூர் மாவட்டம்

தமிழ்நாட்டின் கொங்கு மண்டலத்தில் அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை **34,58,045.** இம்மாவட்டத்தில் ஏராளமான நூற்பாலைகளும் டெக்ஸ்டைல் மில்களும் உள்ளன. நூற்பாலைகளுக்கு அடுத்தபடியாக ஏராளமான ஐ.டி. நிறுவனங்கள் இங்கு உள்ளன. குறுந்தொழில் செய்பவர்கள் உட்பட அனைத்து தரப்பிலும் தொழில் அதிபர்கள் இம்மாவட்டத்தில் உள்ளனர். நூற்பாலைகளில் பணிபுரிபவர்கள் நூல் இழைகளையும் பருத்தி இழைகளையும் உற்று நோக்க வேண்டியிருக்கும். அதனால் பெரும்பான்மையினருக்கு Refractive Error எனும் பார்வை குறைபாடு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. கோயம்புத்தூரில் அரவிந்த் கண் மருத்துவமனையானது 1997 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது; மக்களுக்கு சிறப்பான வகையில் கண் சிகிச்சைகளைத் தொடர்ந்து அளித்து வருகிறது; கண் பரிசோதனை மையங்களை இம்மாவட்டத்தில் தொடங்கி சீரிய முறையில் நடத்தியும் வருகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆறு ஊர்களில் பரிசோதனை மையங்கள் இயங்கி வருகின்றன.

| 2017 டிசம்பர் மாதம் வரை கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அரவிந்த் கண் பரிசோதனை மையங்களில் சிகிச்சை எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| மொத்த வெளிநோயாளிகள் | 2,51,373 |
| கண்ணாடி வாங்கியவர்கள் | 37,425 |
| கண்புரை அறுவை சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 7,763 |
| சிறப்பு பிரிவுகளில் சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 11,894 |

**பெரியநாயக்கன் பாளையம்**
23A, வஞ்சிமாநகர், கூவனூர்,
பழமலை ரோடு,
ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்யாலயா அஞ்சல்,
பெரியநாயக்கன் பாளையம்–641020
தொலைபேசி: 0422–2694380

**தொண்டமுத்தூர்**
23B, வரதராஜபுரம்,
கிராம அலுவலகம் அருகில்,
பெருமாள் கோவில் தெரு,
தொண்டமுத்தூர்
தொலைபேசி: 0422–2617007

**ஈச்சனாரி**
1/160B ஈச்சனாரி–செட்டபாளையம் ரோடு,
சீரப்பாளையம் அஞ்சல், ஈச்சனாரி (Po)
கோயம்புத்தூர்–641021
தொலைபேசி: 0422–2987700

**கிணத்துக்கடவு**
31, அண்ணா தெரு,
N.R. பேக்கரி அருகில்,
கூட்டுறவு வங்கி எதிரில்,
கோயம்புத்தூர் மெயின் ரோடு,
கிணத்துக்கடவு–642105
தொலைபேசி: 04259–241520

**குனியமுத்தூர்**
5, அன்னம்மா நாயுடு தெரு,
சிண்டிகேட் வங்கி அருகில்,
பாலக்காடு மெயின் ரோடு,
குனியமுத்தூர், கோயம்புத்தூர்,
தொலைபேசி: 0422–253100

**புஞ்சை புளியம்பட்டி**
15/7, மாதம்பாளையம் ரோடு,
சிந்தாமணி தொடக்கப் பள்ளி அருகில்,
திரு.வி.க. திடல்,
புஞ்சை புளியம்பட்டி,
சத்தியமங்கலம்,
தொலைபேசி: 04295–268399

2018 ஜூன் மாதம் திருப்பூர் மாவட்டம் கணியூரில் தொடங்கப்படவுள்ள கண் பரிசோதனை மையம்:
அரவிந்த் கண் பரிசோதனை மையம்
725, ஜோதி நகர் முதல் தெரு,
கணியூர்–642203
தொலைபேசி: 04252–241000

# செயற்கை கண்



பார்வையை இழந்த நோயாளிகளின் முகம் பிறர் பார்க்கும்போது விகாரமாகத் தெரியக்கூடாது என்பதற்காக பொருத்தப்படுவதே செயற்கை கண் எனப்படும் ஆக்குலர் பிராஸ்தசிஸ் (Ocular prosthesis). தாழ்வு மனப்பான்மை இன்றி தன்னம்பிக்கையுடன் அவர்கள் வாழ்வை எதிர்கொள்ள செயற்கை கண் வழிவகுக்கிறது.

**பயனாளிகள்:**

- கண் புற்று நோயால் பாதிக்கப்பட்டு கண் அகற்றப்பட்டவர்கள்
- விபத்தில் கண்ணில் காயம் ஏற்பட்டு கண் அகற்றப்பட்ட நோயாளிகள்
- பிறவியிலேயே கண் முழுமையாக வளர்ச்சியடையாதவர்கள் அல்லது ஒரு கண் சுருங்கிய நிலையில் பார்வையில்லாமல் இருப்பவர்கள்

மேற்கூறிய நிலைகளில் உள்ளவர்களுக்கு செயற்கை கண் பொருத்தப்படுகிறது. செயற்கை கண் என்பது நிஜக் கண்களுக்கு மாற்றானது அல்ல. இந்தக் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால், இயற்கையான கண்களைப் போல 50% அசைவு செயற்கை கண்களில் இருக்கும். இமைகளும் மூடித் திறக்கும். ஒருவருக்குக் கண் அகற்றப்பட்டிருந்தாலோ சுருங்கிய நிலையில் கண் இருந்தாலோ அவரைப் பிறர் பரிதாபமாகப் பார்க்கக் கூடும். செயற்கை கண்ணை முகத்தில் பொருத்திக் கொண்டால் அவரைப் பார்க்கும் பிறருக்கு எந்த வித்தியாசமும் தெரியாது.

**வகைகள்:**

- ஏற்கனவே உருவாக்கப்பட்டு, தயார் நிலையில் உள்ள செயற்கை கண்கள், ரெடிமேட் கண்கள் என அழைக்கப்படுகின்றன.
- ஒவ்வொரு நோயாளியின் கண் குழியின் அளவுக்கேற்ற வகையில் தயாரிக்கப்படும் செயற்கை கண்கள், கஸ்டமைஸ்டு ஃபிட் செயற்கை கண் என அழைக்கப்படுகின்றன.

**தயாரிக்கும் முறை:** கஸ்டமைஸ்டு ஃபிட் செயற்கை கண்ணை தயாரிக்கும் முறை பற்றி தெரிந்து கொள்வோமா...

முதலில் பாதிக்கப்பட்டவரின் கண்குழியின் அளவு எடுக்கப்படுகிறது. அந்த அளவைக் கொண்டு மாதிரி வடிவமானது மெழுகில் தயாரிக்கப்படுகிறது. அந்த மாதிரியைக் கொண்டு அச்சு தயாரிக்கப்படுகிறது. அந்த அச்சில் செயற்கை கண் உருவாக்கப்படுகிறது. அடுத்ததாக, வர்ணம் தீட்டி அதன் மேல் லேமினேஷன் எனப்படும் கண்ணாடி போன்ற அடுக்கு உருவாக்கப்படுகிறது. இறுதியாக பாலீஷ் செய்யப்படுகிறது. செயற்கை கண்ணானது இவ்வாறு தயாராகிறது. பக்க விளைவுகளை ஏற்படுத்தாத, மருத்துவப் பயன்பாட்டிற்கு ஏற்ற பாலிமெதில் மெதா அக்ரிலேட் (polymethyl-metha-acrylate) எனும் பொருளால் செயற்கை கண் தயாரிக்கப்படுகிறது.

**தயாரிக்க ஆகும் கால அளவு:**

செயற்கை கண்ணை உருவாக்க, இரண்டு நாட்கள் ஆகும். முதல் நாளன்று அளவு எடுக்கப்பட்டு மெழுகில் மாதிரிக்கண் தயாரிக்கப்படுகிறது. இரண்டாம் நாளன்று வர்ணம் பூசப்பட்டு லேமினேஷன் செய்யப்படுகிறது. செயற்கை கண்ணை உருவாக்க 10 மணி நேரம் ஆகும் என்பதால் ஒரு வேலை நாளில் தயாரித்து விட முடியாது.

**பராமரிப்பு முறைகள்:**

- செயற்கை கண்கள், 5 முதல் 10 ஆண்டுகள் வரை நீடித்திருக்கக்கூடியவை. எனினும் அவற்றை முறையாகப் பயன்படுத்துவது அவசியம்.
- குழந்தைகளுக்கு செயற்கை கண் பொருத்தப்பட்டிருந்தால் குழந்தைகள் வளரும்போது அவர்களது கண்களின் அமைப்பும் வளரும். எனவே சீரான இடைவெளியில் செயற்கை கண்களை மாற்ற வேண்டும்.
- பொதுவாக சிலருக்கு கண்களின் நிறம் நாளடைவில் மாறுபடும். அந்த நோயாளிகளுக்கு செயற்கை கண்களை அவ்வப்போது மாற்ற வேண்டும். ஏனெனில் இரு கண்களும் ஒரே நிறத்தில் இருப்பதே சரியானது. இல்லையேல்

பிறர் இவர்களைப் பார்க்கும்போது வித்தியாசம் இருக்கும்.

– கரடுமுரடான தரையில் விழுவதையோ விபத்துகளுக்கு உள்ளாவதையோ தவிர்க்கவும்.

– பொருத்தப்பட்ட செயற்கை கண்ணின் நிலை குறித்து முறையாக பரிசோதிப்பது அவசியம். வருடத்திற்கு ஒருமுறை கட்டாயம் கண் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்.

### அரவிந்த் செயற்கை கண் மையம்



அரவிந்த் கண் மருத்துவமனையின் செயற்கை கண் மையமானது 2004 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தற்போது வரை 9000 செயற்கை கண்களை இம்மையம் தயாரித்துள்ளது. தோராயமாக, 800–1000 செயற்கை கண்களை இம்மையம் ஒரு வருடத்திற்கு தயாரிக்கிறது. செயற்கை கண் தயாரிப்பில் பல பரிமாணங்களைக் கடந்து வந்துள்ள இம்மையம் தற்போது மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சிறப்பான பொருட்களைக் கொண்டு திறன் வாய்ந்த அணியினர் மூலம் செயற்கை கண்களைத் தயாரிக்கின்றது.

### நோயாளிகளிடம் வரவேற்பு:

மருத்துவ வசதிகளும் தொழில்நுட்பமும் பெரிதும் வளர்ந்து விட்ட இன்றைய காலக்கட்டத்தில் செயற்கை கண்களைப் பற்றியப் போதிய விழிப்புணர்வு இன்னும் பொதுமக்களிடம் பரவலாக இல்லை என்பதுதான் உண்மை. எனினும், குறிப்பிடத்தக்க அளவில் வெளி ஊர்களில் இருந்தும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மகராஷ்டிரம் என வெளி மாநிலங்களில் இருந்தும் நோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். மாலத்தீவுகள், ஆப்பிரிக்கா மலேசியா என பிற நாடுகளில் இருந்தும் வந்து செயற்கை கண்களைப் பொருத்திக் கொள்கின்றனர்.

### இங்கு சிகிச்சைக்கு வருபவர்களைப் பற்றி:

கிராமப்புறங்களில் 1.5 வயது, 2 வயது குழந்தைகளை கால்நடைகளுடன் விளையாட விடுவது வழக்கமாக உள்ளது. ஆனால் அந்தக் குழந்தைகளைக் கோழி, கொக்கு குத்தி விழித்திரை பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் இங்கு சிகிச்சைக்கு அழைத்து வரும்போது மிகவும் சங்கடமாக உள்ளது. ஆழமான காயம் ஏற்பட்டிருந்தால் கண்களை அகற்றுவதுதான் ஒரே தீர்வு.

ரப்பர்பேண்டு, பென்சில், கிட்டிப்புல் போன்றவற்றால் தாக்கப்பட்டு கண்களில் காயம் ஏற்பட்ட குழந்தைகளை சிகிச்சைக்கு அழைத்து வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது. எனவே குழந்தைகளை விளையாட அனுமதிக்கும்போது மிகவும் எச்சரிக்கை தேவை. தமிழகத்தில் பரவலாக அரவிந்த் கண் மருத்துவமனைகள் இயங்கி வந்தாலும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் கிளைகளில் மட்டுமே செயற்கை கண் மையம் உள்ளது. அரவிந்தின் எந்த கிளையில் பரிசோதனைக்குச் சென்றாலும் செயற்கை கண் பற்றிய முழுமையான விளக்கத்தை அரவிந்தின் பணியாளர்கள் அளிப்பார்கள்.

*எழுத்து வடிவம்: கோ. முருகராஜ்*

### அறிவிப்பு:

சென்ற மே மாத கண் ஒளி இதழில் இரு கண் பரிசோதனை மையங்களின் முகவரிகள் தவறாக இடம்பெற்றுள்ளன. வாசகர்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துகிறோம். சரியான முகவரிகள், பின்வருமாறு:

**திருச்சுழி**
AMV காம்ப்ளெக்ஸ்,
தங்கராஜ் மில் எதிர்ப்புறம், நரிக்குடி மெயின் ரோடு, திருச்சுழி–626129
தொலைபேசி: 04666–282111

**வத்திராயிருப்பு**
புதிய எண்: 60, பழைய எண்: 131
அக்ரஹாரம் நடுத்தெரு, குமரகுரு மருத்துவமனை எதிர்ப்புறம், வத்திராயிருப்பு–626132
தொலைபேசி: 8903747927

# 'ரிங் ஆஃப் ஹோப்' திட்டம் – தொடங்கப்பட்டதன் பின்னணி

ரெடினோபிளாஸ்டாமோ எனும் விழித்திரைப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாகச் சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் அரவிந்த் கண் மருத்துவமனையின் 'ரிங் ஆஃப் ஹோப்' திட்டமானது தொடங்கப்பட்டது. ரெடினோபிளாஸ்டோமா விழிப்புணர்வு வாரமானது சென்ற மாதம் மே 13 முதல் 19 வரையிலான தேதிகளில் கடைபிடிக்கப்பட்டது. சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் கருத்தரங்குகளும் அரவிந்த் மருத்துவமனை கிளைகளில் சிறப்பாக நடத்தப்பட்டன.

ஏழு வயதேயான ராமேஸ்வரி விழித்திரைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தாள். அவளுக்கு தாய் இல்லை, தந்தையும் தாத்தாவும் மட்டுமே இருந்தனர். எங்கே இவள் கண் பாதிப்பை சரி செய்ய முடியாமல் போனால் பிற்காலத்தில் நமக்கு பாரமாகி விடுவாளோ என்று எண்ணி தந்தை இவளை விட்டுப் பிரிந்து தனியே சென்று விட்டார். அதன் பிறகு ராமேஸ்வரியின் தாத்தாதான் அவளை சிகிச்சைக்கு அழைத்து வந்தார். ஒரு நாள் அவரும் ராமேஸ்வரியை மருத்துவமனையில் தனியே விட்டுச் சென்று விட்டார். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைக் கூடச் சரியாக புரிந்து கொள்ள முடியாத வயது. சில நாட்களில் ஒருவழியாக தாத்தாவைக் கண்டுபிடித்து ஏன் விட்டுச் சென்றார் என்று கேட்டபோது, அவர் கூறிய காரணம் – வறுமை. "அன்றாடம் வாழ்க்கை நடத்துவதே பெரும்பாடாக இருக்கும் நிலையில், இவளுக்கு ஏற்பட்டிருக்கும் புற்றுநோயை குணப்படுத்த எங்கே இருந்து நான் பணம் திரட்டுவது? இவளைக் காப்பாற்ற ஓரளவு வழிதெரிந்திருந்தால்கூட இப்படி செய்திருக்க மாட்டேன்" என்று கூறி மனமுடைந்து அழுதார்.

ராமேஸ்வரி போன்ற நோயாளிகளை ஒவ்வொரு வாரமும் மருத்துவர்களும் செவிலியர்களும் அரவிந்த் மருத்துவமனைகளில் சந்திக்கின்றனர். அந்த நோயாளிகளின் வாழ்க்கைப் பாடும் தினசரி துயரங்களும் வார்த்தைகளால் முழுமையாகக் கூறிவிட முடியாது. சிகிச்சைக்கு செலவிட முடியாத நோயாளிகளுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் பயனுள்ள வகையில் ஒரு திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் எனும் நோக்கம் வெகுநாட்களாக அரவிந்த் நிர்வாகத்தினருக்கு இருந்தது.

ராமேஸ்வரியின் தாத்தாவிடம் திடீரென காணாமல்போன கதையை மருத்துவமனை மருத்துவர்கள் கேட்டுக் கொண்டிருந்தபோது அரவிந்த் மருத்துவமனையுடன் நீண்ட கால நட்பில் இருந்த ஜெர்ரி ஜோன்ஸ் அரவிந்திற்கு வந்திருந்தார். அவரிடம் ராமேஸ்வரியை அழைத்துச் சென்று அவளது நிலை பற்றி அரவிந்த் மருத்துவர் உஷா தெரிவித்தார். அவர் சிறிதும் தாமதிக்காமல் 1000 அமெரிக்க டாலருக்கான காசோலையை அளித்தார். இதுதான் ரிங் ஆஃப் ஹோப் எனும் அமைப்பு தொடங்கக் காரணமாக அமைந்தது. இந்தத் திட்டத்திற்கு கிடைத்த முதல் நிதியும் இதுதான். மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்திருந்த வயதான பெண்மணி ஒருமுறை, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தையைப் பார்த்து வேதனையுற்று கையில் இருந்த பணத்தில் 350 ரூபாயை அருகில் இருந்த பணியாளரிடம் கொடுத்து, "அந்தக் குழந்தைக்கு எதாச்சும் வாங்கிக் குடும்மா! இல்லன்னா மருந்து வாங்க வச்சுக்கோ" என்றார். " நீங்களே கொடுக்கலாமே" பணியாளர் அவரிடம் தெரிவித்தார். "இதை வாங்கிக் கொள்ள அவர்கள் ஏதேனும் தயக்கம் காட்டலாம். நீங்கள் கொடுத்தால் ஒன்றும் தெரியாது" என்று கூறிவிட்டுச் சென்றார். அவர் பணவசதி படைத்தவர் அல்ல. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிதான். இந்த இரண்டு உதவிகளைத் தொடக்கமாக வைத்தே "ரிங் ஆப் ஹோப்" ஆரம்பிக்கப்பட்டது.

வறுமையான சூழல் அதிகமாகவும், ரெடினோபிளாஸ்டாமோ எனும் விழித்திரைப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே குறைவாக இருப்பதாலும் பெற்றோர்கள் இந்நோயால் பாதிக்கப்பட்ட தங்கள் குழந்தைகளை இறுதி கட்டத்திலேயே மருத்துவமனைக்கு அழைத்து வருகின்றனர்.

இதனால் பல குழந்தைகளின் கண்களும் உயிரும் காப்பாற்ற முடியாத நிலையில் இருந்துள்ளன. பணம் செலுத்தி சிகிச்சை பெற இயலாதவர்களுக்கு அரவிந்தில் இலவச சிகிச்சை அளிக்கப்பட்டாலும், ரெடினோபிளாஸ்டோமாவிற்கு கண் மருத்துவத்தைத் தாண்டி பல சிறப்பு சிகிச்சைகளும் தேவைப்படும். ரேடியோதெரபி, ரேடியாலாஜி, ஆங்காலாஜி, நியூரோசர்ஜெரி, பெத்தாலாஜி மற்றும் ENT போன்ற சிறப்பு மருத்துவக்குழு இலவச சிகிச்சையளிக்க தயாராக இருந்தாலும்கூட புற்றுநோய் மருந்துகளுக்கும், ரத்தம் மாற்றுவதற்கும் கூடுதலாக பணம் அவசியமாகிறது. இதற்கு, ரிங் ஆஃப் ஹோப் மற்றவர்களிடம் இருந்து பெறப்படும் நன்கொடையைக் கொண்டு குழந்தைகளுக்கு தேவைப்படும் மருத்துவச் செலவுகளைக் கவனித்து வருகிறது.

நினைத்தவுடன் எளிதில் ஆரம்பிக்கப்பட்டதல்ல ரிங் ஆஃப் ஹோப். குழந்தைகளின் மருத்துவச் செலவிற்கு தேவைப்படும் நிதியைத் திரட்ட ஆரம்ப காலத்தில் பல தடைகள் ஏற்பட்டன. மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையின் டாக்டர் உஷா அவர்களின் விடாமுயற்சியும் பல நல்லமணம் கொண்ட மனிதர்கள் இம்முயற்சியில் அரவிந்துடன் கைகோர்த்ததன் விளைவாகவும் ரிங் ஆஃப் ஹோப் ஆரம்பிக்கப்பட்டது. ரிங் ஆஃப் ஹோப்பிற்கு அரவிந்த் கண் அறக்கட்டளை அளிக்கும் ஆதரவு குறிப்பிடப்பட வேண்டியது. இந்த அறக்கட்டளை, அரவிந்திற்கு வரும் எந்தவொரு ரெடினோபிளாஸ்டோமா நோயாளியும் பணம் இல்லை என்பதற்காக சிகிச்சை பெறாமல் செல்லக் கூடாது என்பதை உறுதி செய்கிறது. இந்த நிதி மூலம், ஆரம்பத்திலிருந்து இன்று வரை ஆயிரக்கணக்கான ஏழைக் குழந்தைகளின் உயிரும் பார்வையும் காப்பாற்றப்பட்டுள்ளன.

மேலும் விவரங்களுக்கு: http://aravindeyefoundation.org/Home/ringofhope

*தொகுப்பு: திவ்யா ரமேஷ்*

## ரெடினோபிளாஸ்டோமா

ரெடினோபிளாஸ்டோமா என்ற கண் விழித்திரைப் புற்றுநோய் பெரும்பாலும் ஐந்து வயது வரையிலான குழந்தைகளுக்கு ஏற்படும் நோயாகும். குழந்தைக்கு விழித்திரைப் புற்றுநோய் இருந்தால், குழந்தையின் கண்களில் வெள்ளைநிற ஒளி போன்று தெரியும். குழந்தை முகங்களையும் பொருட்களையும் நேராகப் பார்க்காமல் வெவ்வேறு திசைகளில் பார்ப்பது போலத் தெரியும். கண்களில் வீக்கம் அல்லது தொடர்ச்சியாக சிவந்து காணப்படும். இவை தவிர மாறுகண்ணும் இந்நோயின் முக்கிய அறிகுறியாகும். இது குழந்தைகளுக்கு ஏற்படும் நோய் என்பதால் இந்நோயைக் கண்டறிவதில் பெற்றோர்களின் பங்கு மிக அவசியமாகும்.

ரெடினோபிளாஸ்டோமாவினால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் குழந்தைகளுக்கு இந்நோய் வருவதற்கான சாதியக் கூறுகள் அதிகம் உள்ளது. கண்களில் புற்றுநோய் இருப்பதை கண் மருத்துவரால் மட்டுமே கண்டறிய இயலும். ரெடினோபிளாஸ்டோமாவிற்கு மூன்று நிலைகளில் சிகிச்சையளிக்கப்படுகிறது. நோயின் தன்மை தீவிர நிலையில் இருந்தால் அது மற்ற இடங்களுக்கும் பரவாமல் இருக்க பாதிக்கப்பட்ட கண்கள் அகற்றப்படும். சிகிச்சையளிக்கக்கூடிய நிலையில் புற்றுநோய் இருந்தால் லேசர் தெரப்பி, ரேடியோ தெரப்பி, கீமோதெரப்பி போன்ற சிகிச்சைகள் அளிக்கப்படும். புற்றுநோய் கட்டிகள் அளிக்கப்பட்டதும் குழந்தையின் பார்வைத் திறனை மேம்படுத்துவதற்கான சிகிச்சைகள் அளிக்கப்படும். கண் விழித்திரைப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டவுடன் மருத்துவர் ஆலோசனைப்படி சிகிச்சையும் தொடர் பரிசோதனையும் மேற்கொள்வது அவசியம்.

**அறிவிப்பு**

மதுரை மாவட்டம் சேடப்பட்டியில் இயங்கி வந்த அரவிந்த் கண் பரிசோதனை மையம், மதுரை மாவட்டத்தில் உள்ள எழுமலைக்கு மாற்றப்பட்டுள்ளது. புதிய முகவரி, பின்வருமாறு:

அரவிந்த் கண் பரிசோதனை மையம், தெற்கு ரத வீதி, பேட்டை பத்திர காளியம்மன் கோவில் அருகில்,

எழுமலை, பேரையூர் தாலுகா.

# செயலி அறிமுகம் – Google Fit

உடல்நலனை காப்பது மனிதர்களுக்கு இன்று இருக்கும் மிகப்பெரும் சவால்களில் ஒன்று. நமது பலவிதப் பெயர்களில் உடல்நலனை பாதுகாக்கும் மையங்கள் வீதிதோறும் இருக்கின்றன. அவை தவிர எப்போதும் நமது உடல் இயக்கங்களை கண்காணிக்க ஏராளமான செயலிகள் அலைபேசியில் பயன்படுத்தும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன; வெளிவந்தவண்ணம் உள்ளன.

ஸ்மார்ட் ஃபோனில் ஃபிட்னஸ் என்று டைப் செய்தால் ஏராளமான செயலிகள் திரையில் வந்து நிற்கும். அதில் எது சிறந்தது என்பதைக் கண்டறிவது சற்று குழப்பம் நிறைந்ததுதான். இந்தக் குழப்பங்களைக் கருத்தில்கொண்டு உங்களது உடல் தொடர்பான அனைத்து தகவல்களையும் சேகரித்து வைக்கும் இடமாக Google Fit என்ற ஆண்ட்ராய்டு செயலியை கூகுள் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்தச் செயலியை ஆண்ட்ராய்டு ஸ்மார்ட் ஃபோனில் மட்டுமே செயல்படுத்த முடியும். நீங்கள் ஏற்கனவே ஏதேனும் உடல்நலக் கவனிப்பு செயலியை உங்கள் அலைபேசியில் வைத்திருந்தால் அதனுடன் Google Fit ஐ இணைத்துப் பயன்படுத்தலாம். அந்த செயலியில் இருக்கும் அமைப்பு முறைகளில் (Settings) சிறிது மாற்றங்கள் செய்வதன் மூலம் Google fit உடன் இணைக்க முடியும். Google fit கிட்டத்தட்ட 43 வெவ்வேறான செயலிகளுடன் இணைந்து பணிபுரியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Google fit செயலியானது நடைப்பயிற்சி செய்த தொலைவு, கலோரியின் அளவு மற்றும் எடை போன்ற தகவல்களைக் கொடுக்கும். நீங்கள் மற்ற ஃபிட்னஸ் செயலியுடன் Google fit ஐ இணைத்திருந்தால் உங்களுக்கு இன்னும் கூடுதல் பலன்கள் கிடைக்கும். உங்களது அனைத்து தகவல்களையும் Google fit இணையதளத்தில் பார்க்கலாம்.




எடையைக் குறைப்பது உங்கள் இலக்காக இருந்தால், நீங்கள் உட்கொள்ளும் கலோரிகளை விட எரிக்க வேண்டிய கலோரிகளின் அளவு அதிகம் இருக்க வேண்டும். எனவே கலோரிகளைக் கணக்கிட Google fit ஆனது MyFitnessPal மற்றும் Calories Counter போன்ற செயலிகளுடன் இணைந்து செயல்பட்டு உங்களுக்கு உதவுகிறது. தொடர்ந்து உங்களது எடை குறித்த உள்ளீடுகளை நீங்கள் Google fit இல் அளித்தால் அது உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் உங்களது எடை குறித்த அட்டவணையை கொடுக்கும். உங்களது இலக்கை நெருங்குவதற்கான கால அளவையும் அது காட்டும். போதிய நேரம் தினமும் தூங்குகிறீர்களா என்பதை Google Fit தானாக கண்காணிக்க இயலாது. ஆனால் ஸ்லீப் போன்ற ஆண்ட்ராய்டு செயலிகளுடன் இணைந்து ஆழ்ந்த தூக்கத்தில் நீங்கள் ஈடுபட்ட நேரத்தைக் கணக்கிட்டு அதன் தரவுகளைக் கொடுக்கும்.

*தொகுப்பு: திவ்யா ரமேஷ்*



*ஒவ்வொரு மாதமும் 10, 11 தேதிகளில் கண் ஒளி இதழ்களை 13000க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களின் முகவரிகளுக்கு முறையாகச் சரிபார்த்த பின்னரே தபாலில் அனுப்பி வைக்கிறோம். இருப்பினும் வெகு சில சந்தாதாரர்கள் தங்களுக்கு 'கண் ஒளி' இதழ்கள் சரிவர கிடைப்பதில்லை என்றும், ஒரு மாதம் வரும் இதழ் மறு மாதம் வருவதில்லை என்றும் புகாரளிக்கின்றனர். இதழ் கிடைக்கவில்லை எனில் உங்கள் ஊரில் உள்ள தபால் நிலையத்தில் புகாரளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் உங்கள் பகுதி அஞ்சல்துறை பணியாளரிடம் இதழைத் தவறாமல் விநியோகிக்கும்படி கோரவும்.*

***– கண் ஒளி' ஆசிரியர் குழு.***

# அரவிந்த் கண் மருத்துவமனை நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம்கள் பற்றிய விவரங்கள்

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 16.6.18 | போடி | சேனைத்தலைவர் மண்டபம் | தேனி | போடி அரிமா சங்கம் | |
| 16.6.18 | கேதர் | ரெட் விங் பள்ளி | விழுப்புரம் | ரெட் விங் பள்ளி | |
| 16.6.18 | மோகனூர் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | நாமக்கல் | ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம் | 8903516403 |
| 16.6.18 | செட்டியார்பட்டி | இராஜாஜி இலவச மெடிக்கல் சென்டர் | விருதுநகர் | பார்த்தசாரதி டிரஸ்ட் | 9994111956 |
| 16.6.18 | வடலூர் | OPR மெமோரியல் பள்ளி | கடலூர் | சுத்த சன்மார்க்க நிலையம் | |
| 16.6.18 | கடவூர் | இன்பசேவா சங்கம் | கரூர் | இன்பசேவா சங்கம் டிரெயினிங்செல் | 9042261153 |
| 17.6.18 | தென்காசி | சுப்புராஜ் மஹால் | திருநெல்வேலி | BSSSSO | 9842132442 |
| 17.6.18 | பேராவூரணி | பஞ்சாயத்து யூனியன் பள்ளி மேற்கு | தஞ்சாவூர் | விவேகானந்த இலக்கியப் பேரவை | 9976191052 |
| 17.6.18 | வாழவாரா | ஆடிட்டோரியம் | இடுக்கி | SNDP டிரஸ்ட் | |
| 17.6.18 | திருப்பூர் | லயன்ஸ் ஹால் | திருப்பூர் | லயன்ஸ் சங்கம் | 9442190045 |
| 17.6.18 | திருவளர்சோலை | ஸ்ரீரங்கம் சீரடிசாய் பவுண்டேஷன் | திருச்சி | சீரடிசாய் பவுண்டேஷன் | 9500422696 |
| 17.6.18 | கொள்ளேகால் | அரசு தாலுகா தலைமை மருத்துவனை | சாம்ராஜ்நகர் | V&M பவுண்டேஷன் பெங்களூர் | 9343968272 |
| 17.6.18 | பட்டம்பி | வியாபாரி பவன் டிரஸ்ட் | பாலக்காடு | சேம்பர் ஆப் காமர்ஸ் | 9846781688 |
| 17.6.18 | ஆத்திகுளம் | இராமகிருஷ்ணா மடம் | மதுரை | இராமகிருஷ்ணா மடம் | 9487493525 |
| 17.6.18 | செக்கிப்பட்டி | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | மதுரை | அய்யப்ப சேவா சங்கம் | 8940661419 |
| 17.6.18 | பெரியநாயக்கன் பாளையம் | GRD மெ.மே.நி.பள்ளி | கோயம்புத்தூர் | LMW | |
| 17.6.18 | ரெட்டிபாளையம் | அரசு மே.நி.பள்ளி | அரியலூர் | அல்ட்ராடெக் சிமிண்ட் | |
| 17.6.18 | திருக்கோயிலூர் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | விழுப்புரம் | வாசவி கிளப் | |
| 17.6.18 | சிவகாசி | அரசன் AMS கல்யாண மஹால் | விருதுநகர் | ஸ்ரீ சத்யசாய் சேவா சமிதி | 9894416135 |
| 17.6.18 | செய்யாறு | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | திருவண்ணாமலை | கௌதம் பைனான்ஸ் | |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 17.6.18 | மயிலாடுதுறை | முனிசிபல் மே.நி.பள்ளி | நாகை | சீமாட்டி சில்க்ஸ் | |
| 21.6.18 | தேவராயன்பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | தி சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 21.6.18 | வடுகப்பட்டி | வெள்ளாளர் சமுதாயக்கூடம் | தேனி | டாக்டர்.செல்வராஜ் | |
| 22.6.18 | திருபணிநத்தம் | காமராஜ் பாலிடெக்னிக் | கடலூர் | காமராஜ் பாலிடெக்னிக் | |
| 23.6.18 | வருசநாடு | மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மன்றம் | தேனி | ஓம் சக்தி மன்றம் | |
| 23.6.18 | சாத்தனூர் | அரசு. மே.நி.பள்ளி | திருவண்ணாமலை | லயன்ஸ் சங்கம் | |
| 23.6.18 | திருகடையூர் | அரசு நடுநிலைப்பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் | |
| 23.6.18 | ஹன்சூர் | SLV கம்யூனிட்டி ஹால் | மைசூர் | திரு.சின்னசாமி மற்றும் முருகேசன் குடும்பம் | 9448352929 |
| 24.6.18 | ஊட்டி | CSI ஹோபர்ட் பள்ளி | நீலகிரி | ரோட்டரி சங்கம் | 9442109100 |
| 24.6.18 | கும்பகோணம் | சரஸ்வதி பாடசாலை | தஞ்சாவூர் | கும்பகோணம் ஹோஸ்ட் | 9952362201 |
| 24.6.18 | இராஜபாளையம் | PSK கல்யாண மஹால் | விருதுநகர் | லயன்ஸ் சங்கம் | 9150320551 |
| 24.6.18 | உப்பத்தூர் | யூனியன் பப்ளிக் பள்ளி | விருதுநகர் | பஞ்சாயத்து யூனியன் | 9486177301 |
| 24.6.18 | ஆத்தூர் | சின்னச்சாமி அய்யா ந.நி.பள்ளி | சேலம் | கலைவாணர் மன்றம் | 9443827013 |
| 24.6.18 | வீரப்பூர் | அரசினர் உயர்நிலைபள்ளி | திருச்சி | லயன்ஸ் சங்கம் பரமத்தி போர்ட் | 9443332972 |
| 24.6.18 | விராட்டிபத்து | லெட்சுமி நர்சரி பள்ளி | மதுரை | மெம்பர், இந்தியன் ரெட் கிராஸ் | 8754741759 |
| 24.6.18 | மீனாட்சி நகர் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | மதுரை | செர்ரி ஈவெண்ட்ஸ் | 9790169844 |
| 24.6.18 | பண்ருட்டி | லயன்ஸ் பில்டிங் | கடலூர் | லயன்ஸ் சங்கம் | |
| 24.6.18 | தேசூர் | அரசு. மே.நி.பள்ளி | திருவண்ணாமலை | M.S.ஜீவல்லரி | |
| 24.6.18 | குத்தாலம் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | நாகை | JCI | |
| 24.6.18 | கோழியனூர் | கோனிபர் மெட்ரிக் பள்ளி | விழுப்புரம் | கோனிபர் மெட்ரிக் பள்ளி | |
| 28.6.18 | ஒட்டன்சத்திரம் | பழனியப்பா கல்யாண மஹால் | திண்டுக்கல் | ஸ்ரீகாமாட்சி பிள்ளை ஜின்னிங் பாக்டரி | 9443040232 |
| 28.6.18 | கோடாங்கிபட்டி | SKA மஹால் | தேனி | மதுரா மைக்ரோ பைனான்ஸ் | |
| 30.6.18 | T. கல்லுப்பட்டி | அய்யனார் கல்யாண மஹால் | மதுரை | நகர்நல கமிட்டி | 9842175940 |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 30.6.18 | கண்டச்சிபுரம் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | விழுப்புரம் | அய்யப்ப சேவாசங்கம் | |
| 30.6.18 | பாளையம் | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | தேனி | மகாத்மா நுகர்வோர் | |
| 1.7.18 | சாம்ராஜ் நகர் | அரசினர் மருத்துவமனை | சாம்ராஜ் நகர் | DBCS சாம்ராஜ் நகர் | 9945228015 |
| 1.7.18 | வடசேரி | SMRV மே.நி.பள்ளி | கன்னியாகுமரி | BSSSSO | 9578678075 |
| 1.7.18 | கலப்பநாயக்கன்பட்டி | பிருந்தாவன் மெ.மே.நி.பள்ளி | நாமக்கல் | NRPW& D டிரஸ்ட் | 9842203445 |
| 1.7.18 | கொப்பம் | லயன்ஸ் பள்ளி, பாலக்காடு | பாலக்காடு | லயன்ஸ் சங்கம் | 9349458196 |
| 1.7.18 | திருப்பரங்குன்றம் | மாதா அமிர்தானந்தமயி மடம் | மதுரை | மாதா அமிர்தானந்தமயி மடம் | 9443337080 |
| 1.7.18 | அவனியாபுரம் | சூர்யா நர்சரி பள்ளி | மதுரை | வில்லாபுரம் SBI | 9965291292 |
| 1.7.18 | மேட்டுப்பாளையம் | ஜெயின் சங்கம் பில்டிங் | கோயமுத்தூர் | ஜெயின் சங்கம் | 9865789137 |
| 1.7.18 | கோபிசெட்டிப்பாளையம் | சின்ன வைரவிழா எலிமெண்டரி பள்ளி | ஈரோடு | லயன்ஸ் சங்கம் | 9791966759 |
| 1.7.18 | திருவண்ணாமலை | கார்மெல் மெ.பள்ளி | திருவண்ணாமலை | சாயர் ஜீவல்லர்ஸ் | |
| 4.7.18 | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா ஹால் | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா | 9486030438 |
| 5.7.18 | தேவராயன்பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | தி சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 7.7.18 | தருமபுரி | ரோட்டரி ஹால் | தருமபுரி | ரோட்டரி சங்கம் | 9842761659 |
| 7.7.18 | சிந்தாமணி | R.C. பிரைமரி பள்ளி | திருநெல்வேலி | ராஜகோபால் நாயக்கர் டிரஸ்ட் | 9865493488 |
| 7.7.18 | செங்கம் | கணேசர் திருமண மண்டபம் | திருவண்ணாமலை | கணேசர் குரூப்ஸ் | |
| 8.7.18 | பரப்பூர் | ஓல்ட் ஏஜ் ஹோம் | திருச்சூர் | பகல் வீடு | |
| 8.7.18 | R.R. நகர் | ஸ்ரீராம் பிரைமரி பள்ளி | விருதுநகர் | ராம்கோ சிமெண்ட் | 9994497864 |
| 14.7.18 | சத்தியமங்கலம் | ரோட்டரி ஹால் | ஈரோடு | ரோட்டரி சங்கம் சத்தி | 9943011211 |
| 14.7.18 | தருமபுரி | சந்திரபாலசுப்பிரமணியம் மெ.பள்ளி | தருமபுரி | ஹேமலதாடிரஸ்ட் | 9942253585 |
| 14.7.18 | நஞ்சன்கூடு | டவுன் டென்னிஸ் கிளப் | மைசூர் | டவுன் டென்னிஸ் கிளப் | 9019126767 |
| 14.7.18 | உடுமலைப்பேட்டை | லயன்ஸ் ஹால் | திருப்பூர் | லயன்ஸ் சங்கம் | 9894623625 |
| 15.7.18 | ஈரோடு | செங்குந்தர் ஆண்கள் மே.நி.பள்ளி | ஈரோடு | லயன்ஸ் சங்கம் | 9443405016 |
| 15.7.18 | ஆத்திகுளம் | இராமகிருஷ்ணா மடம் | மதுரை | இராமகிருஷ்ணா மடம் | 9487493525 |

# கண் தானம் செய்த வள்ளல்கள்

## அரவிந்த் – பாண்டிச்சேரி

### ஜூன்-2017

பெரியம்மாள் - கள்ளக்குறிச்சி.
குணசேகரி - பாண்டிச்சேரி.
ஷண்முகம்.கே - பண்ருட்டி.
ஆனந்தலெட்சுமி .சே. - சிதம்பரம்.
ஞானகுருநாதன்.ரா. - கள்ளக்குறிச்சி.
அமுதா.உ. - பாண்டிச்சேரி.
செந்தில்குமார்.பெ. - பாண்டிச்சேரி.
இராகவன் - நெய்வேலி.
சௌந்தரநாயகி.சி. - மயிலாடுதுறை.
மாரியம்மாள்.அ. - உளுந்தூர்பேட்டை.
சுவாமிநாதன் - குறிஞ்சிப்பாடி.
கண்ணன் - நாகப்பட்டினம்.
மோகன் - பாண்டிச்சேரி.
ஸ்ரீதர்.பி. - சீர்காழி.
அய்யனார் - பாண்டிச்சேரி.
சித்ரா - கடலூர்.
பிருந்தாவதி - பாண்டிச்சேரி.
சத்யநாராயணன் - பண்ருட்டி.
பஞ்சு அம்மாள் - சங்கராபுரம்.
இராகமாலினி - சின்னசேலம்.
ரவி - பாண்டிச்சேரி.
சரோஜினி - விக்கிரவாண்டி.
ஐயப்பன்.ச. - சிதம்பரம்.
ஆறுமுகம் - நெய்வேலி.
வசந்தா - அரியலூர்.
லதா.ர. - வில்லியனூர்.
முருகன் - வில்லியனூர்.
கிரி - பண்ருட்டி.
கஸ்தூரி - கடலூர்.
கிருஷ்ணன் - நெய்வேலி.
உண்ணாமலை .த. - நைனார்பாளையம்.
பாக்கியநாதன் - பாண்டிச்சேரி.
நளினி - விழுப்புரம்.
இராஜேஸ்வரி - புவனகிரி.
தைலம்மாள் - சின்னசேலம்.
சிவானந்தம்.அ. - சின்னசேலம்.
வெங்கடேசன் - பாண்டிச்சேரி.
சம்பலால் ஜெயின் - சிதம்பரம்.
சோமவைத்தியலிங்கம் - சங்கராபுரம்.
வரதராஜுலு செட்டியார்.கு. - கள்ளக்குறிச்சி.
சாரங்கம் - புவனகிரி.
நடராஜன் - கடலூர்.
குருசாமி- பாண்டிச்சேரி.
கௌசல்யா - சிதம்பரம்.

## அரவிந்த் – திருநெல்வேலி

### செப்டம்பர்-2017

கல்யாணராஜன் - சிவகாசி.
குமரேசன் - சிவகாசி.
முத்துக்குமார் நாடார் - தென்காசி.
சுப்பையா - சிவகாசி.
நடராஜன் - சிவகாசி.
ஜானகியம்மாள் - சிவகாசி.
காளிராஜன் - சிவகாசி.
குத்தாலிங்க நாடார் - கீழப்பாவூர்.
வெள்ளைச்சாமி - சிவகாசி.
குமுதா - தச்சநல்லூர்.
பாண்டியன் - சிவகாசி.
சுந்தரராஜன் - சிவகாசி.
வெள்ளையம்மாள் - சிவகாசி.
புஷ்பவள்ளி - சிவகாசி.
ஆறுமுகம் - சிவகாசி.
பாப்பா - சிவகாசி.
மல்லிகா - சிவகாசி.
கோமதியம்மாள் - சிவகாசி.
ஜெயராஜ் நாடார் - சிவகாசி.
தங்கத்தாய் - பாவூர்சத்திரம்.
கேசவன் - சிவகாசி.
கோபால் - கல்லிடைக்குறிச்சி.
சிம்சன் - பாவூர்சத்திரம்.
வெங்கடகிருஷ்ணன் - சிவகாசி.
சீதாலெட்சுமி - கல்லிடைக்குறிச்சி.
பெரியசாமி - சிவகாசி.
முத்தம்மாள் - சிவகாசி.
நம்பியம்மாள் - பாளையங்கோட்டை.
ராஜமோகன் - சிவகாசி.
ரமேஷ் - சிவகாசி.
அருணாச்சலம் - சிவகாசி.
சரோஜினி - சிவகாசி.
ஜான்குணபாலன் - சிவகாசி.
செல்வராஜ் - கோவில்பட்டி.
பழனிச்சாமி - பாவூர்சத்திரம்.
கற்பகவல்லி - சிவகாசி.
ஜானகி - சிவகாசி.
குமார் - சிவகாசி.
நம்பி - வீரவநல்லூர்.
அமிர்தவள்ளி - சிவகாசி.

2018 ம் ஆண்டில் மே மாதம் நமது ரோட்டரி அரவிந்த் அகில உலக கண் வங்கி மூலம் கண்களைத் தானமாகப் பெற்று கண்ஒளி பெற்றவர்களின் எண்ணிக்கை: **540.**

இறந்தவர்களின் கண்களைத் தானம் செய்யவும் அதைப் பற்றிய வழிமுறைகளைப் பற்றி விரிவாகத் தெரிந்துக் கொள்ளவும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

*ரோட்டரி அரவிந்த் அகில உலக கண் வங்கி*
*அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை-625 020, தொலைபேசி எண்: 0452 - 4356100; Ext: 421*

# +2 தேர்ச்சி அடைந்த மாணவிகளுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு

மாறிவரும் பொருளாதார, சமூக, வாழ்வியல் சூழ்நிலைகளில் பெண்களும் வேலைக்குச் செல்வது அத்தியாவசியமாகி விட்டது. மருத்துவச் சேவையில் ஈடுபடவும், பாதுகாப்பான பணியிடங்களில் பணியாற்ற விரும்பும் பெண்களுக்கு மிகச் சிறந்த தேர்வாக அரவிந்த் கண் மருத்துவமனைகள் விளங்குகின்றன. +2 தேர்வுகளில் தேர்ச்சி அடைந்த மாணவிகளுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பை அரவிந்த் வழங்குகிறது.

### பயிற்சிகளின் விவரங்கள்:

- மருத்துவப் பதிவேட்டுத் துறை (Medical Record)
- விழி ஒளி பரிசோதகர் (Refractionist)
- கண் மருத்துவ உதவியாளர் (Ophthalmic Assistant)
- மருத்துவ ஆலோசகர் (Counsellor)
- மருத்துவமனை இல்லப் பராமரிப்பாளர் (House Keeper)
- கண் கண்ணாடிகள் தயாரித்தல் & விநியோகம் செய்தல் (Optical Sales & Technology)
- உணவுத் துறையியல் (Catering)

### செவிலியர்களின் பொறுப்புகளும் கடமைகளும்

அரவிந்த் கண் மருத்துவமனைகளில் பணியாற்றும் செவிலியர்கள், அதிக எண்ணிகையிலான நோயாளிகளை மிகுந்த அக்கறையுடன் கவனித்து சிகிச்சை அளிக்கின்றனர்.

### மருத்துவப் பதிவேட்டுப் பிரிவில் செவிலியர்களின் பங்கு

- நோயாளிகளின் விவரங்களைப் பதிவுசெய்தல் மற்றும் தேவையான ஆவணங்களைத் தயார் செய்தல்.
- பதிவு செய்தபிறகு நோயாளிகளை அவர்கள் செல்ல வேண்டிய பிரிவுகளுக்கு அவர்களை கனிவுடன் வழிநடத்துதல்.
- மருத்துவப் பதிவேடுகளின்படி விலைப்பட்டியல்களைச் சரிபார்த்தல்.

### விழி ஒளி பரிசோதனைப் பிரிவில் செவிலியர்களின் பங்கு

- அனைத்து நோயாளிகளுக்கும் பார்வையைப் பரிசோதித்து பதிவுசெய்தல்.
- பரிசோதனையின்போது நோயாளி கண்ணாடி அணிய வேண்டுமா என்பதைக் கண்டறிதல்.
- கண்ணாடி அணிந்திருக்கும் நோயாளி எனில் கண்ணாடியில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்குமா என்பதைக் கண்டறிதல்.
- குழந்தைகளுக்கு பார்வை குறைபாடு உள்ளதா என்பதைக் கண்டறிந்து தேவையான சிகிச்சையைப் பரிந்துரைத்தல்.

### புறநோயாளிகள் பிரிவில் செவிலியர்களின் பங்கு

- இரத்த அழுத்தம், கண்ணீர் பாதையில் அடைப்பு உள்ளதா என்பதைப் பரிசோதித்தல், IOP அளவிடுதல் போன்ற அடிப்படை சோதனைகளை மேற்கொள்ளுதல், கூடுதல் பரிசோதனைகளையும் மேற்கொள்ளுதல்.
- நோயாளிகாளின் எண்ணிக்கை அதிகம் இருக்கும் பட்சத்தில் பக்குவமாக அவர்களை கையாளுதல்.

### உள்நோயாளிகள் பிரிவில் பணியாற்றும் செவிலியர்களின் பங்கு

- அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் நோயாளிகளைக் கவனித்துக் கொள்ளுதல்.
- மிகவும் உடல்நலன் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை கூடுதல் அக்கறையுடன் முன்னுரிமை கொடுத்து கவனித்து கொள்ளுதல்.
- அறுவை சிகிச்சை அரங்கிற்கு நோயாளிகளை அனுப்புவதில் தெளிவான நடைமுறையைப் பின்பற்றுதல்.

### அறுவைசிகிச்சை அரங்குகளில் செவிலியர்களின் பங்கு

- அறுவை சிகிச்சைக்காக வந்துள்ள நோயாளிகளின் பதட்டத்தைப் போக்கும் வகையில் நம்பிக்கையளிக்கும் ஆலோசனைகளை வழங்குதல்

– அறுவை சிகிச்சை அரங்குகளில் தொற்று நோய்கள் ஏற்படாதவண்ணம் அறைகளை அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் முறையாக சுத்தம் செய்தல்; அதிக அளவிலான நோயாளிகள் ஒருநாளில் அறுவைசிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதால் விரைவாகவும் திருத்தமாகவும் இவ்வேளையைச் செய்தல்.

**ஆலோசனை பிரிவில் பணியாற்றும் செவிலியர்களின் பங்கு**

– நோய்கள் மற்றும் சிகிச்சை தேர்வுகள் பற்றிய விவரங்களைத் தெளிவாக நோயாளிகளுக்கு எடுத்துரைத்தல்.
– அறுவைசிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான ஆலோசனைகள வழங்கி அவர்களது தயக்கத்தைப் போக்குதல்.
– மருத்துவர்களுடனான நோயாளிகளது சந்திப்புகளை அமைத்துத் தருதல் மற்றும் கையாளுதல்.
– வேறு மருத்துவமனைகளில் இருந்து அரவிந்திற்கு பரிந்துரைக்கப்பட்டு வரும் நோயாளிகளை வழிநடத்துதல்.
– முகாம்களுக்காக அனுப்பப்படும் செவிலியர்களின் பட்டியலில் குழப்பங்கள் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளுதல்.
– மறுபரிசோதனைக்கு வருதல், அறுவை சிகிச்சைக்கு ஒப்புதல் தெரிவித்த நோயாளிகள் மற்றும் அறிக்கைகள் பற்றிய தரவுகளைச் (Data) சேகரித்தல்.

**மருத்துவமனை இல்லப்பணியாளர்களின் பங்கு**

– மருத்துவமனையைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் பராமரித்தல்.
– நோயாளிகளுக்கு திருப்தி ஏற்படும் வகையில் பிற துறைப் பணியாளர்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
– கழிவு மேலாண்மை மற்றும் தொற்று நோய் கட்டுப்பாட்டில் அதிக கவனம் செலுத்துதல்.

**கண்ணாடிக் கடைகளில் செவிலியர்களின் பங்கு**

– நோயாளிகள் தங்களுக்கு பொருத்தமான லென்ஸ்களையும் ஃபிரேம்களையும் தேர்வு செய்ய உதவி செய்தல்.
– மருத்துவரின் பரிந்துரைக்கு ஏற்ப லென்ஸ்களை தயார் செய்தல்.
– லென்ஸ், ஃபிரேம், கண்ணாடி என அனைத்திலும் தரத்தைச் சோதனை செய்தல்.
– கண்ணாடிகளைப் பயன்படுத்தும் விதம், பராமரிக்கும் விதம் ஆகியவற்றை தெளிவாக நோயாளிகளுக்கு வழங்குதல்.
– நோயாளிகளின் குறைகளையும் ஆலோசனைகளையும் கேட்டு அறிதல்.
– கண்ணாடி விற்பனை பற்றிய அறிக்கையை முறையாக தயாரித்தல்.




**அரவிந்த் கண் மருத்துவமனையில்**
**பெண்களுக்கான வேலை வாய்ப்புப் பயிற்சி**



**கல்வித்தகுதி: +2 தேர்ச்சியடைந்தவர்கள் | வயது வரம்பு: 17 முதல் 19 வரை**

விண்ணப்பப் படிவங்கள் 2.4.18 முதல் 30.6.18 வரை வழங்கப்படும். +2 தேர்வு முடிவுகள் வெளியாகி, சான்றிதழ் கிடைக்கப்பெற்ற ஓரிரு வாரத்திற்குள் பூர்த்தி செய்து, விண்ணப்பங்களை எங்கள் முகவரிக்கு அனுப்பவும்.

**விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் இடங்கள்**
**அரவிந்த் கண் மருத்துவமனைகள்**

மதுரை | தேனி | திருநெல்வேலி | கோயம்புத்தூர் | உடுமலைப்பேட்டை | தூத்துக்குடி.
பாண்டிச்சேரி | சேலம் | திருப்பூர் | திண்டுக்கல் | சென்னை



*Owned and published by Dr. G. Natchiar from Aravind Eye Hospital, 1, Anna Nagar, Madurai - 625 020 and Printed by N. Seshadri at Graphico, No, 172, Vakil New Street, Simmakkal, Madurai - 625 001.*
*Editor: Dr. G. Natchiar / Annual Subscription Rs.25/-*